




# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்

Madurai Mani Tamil Evening Daily ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்




| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 162 | உள்ளூர் - 11.06.2026 | வியாழன் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue 162 | வெளியூர் - 12.06.2026 | வெள்ளி | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |


ஜூன் 17 முதல் இந்த ராசிகளுக்கு யோகம்!

பேங்க் ஆஃப் பரோடாவில் 5000 பணியிடங்கள்!

அனைத்து டெண்டர்களும் நிறுத்தம்: அறநிலையத் துறை!

அசுர வேகத்தில் 50 வந்தே பாரத் ரயில்கள்!




# டெல்லியில் நிதி யோக் கூட்டம்!

புதுடெல்லி, ஜூன். 11–

நிதி ஆயோக் (NITI Aayog) என்பது இந்தியாவின் வளர்ச்சி மற்றும் பொருளாதாரக் கொள்கைகளை வடிவமைக்கும் முதன்மை சிந்தனைக் குழுவாகும். இது 2015–ம் ஆண்டு ஜனவரி 1 அன்று முந்தைய திட்டக் குழுவிற்கு மாற்றாக உருவாக்கப்பட்டது.

நாட்டின் திட்டமிடல் செயல்பாட்டில் அனைத்து மாநிலங்களையும் சமமாக ஈடுபடுத்துவதே இதன் முக்கிய நோக்கமாகும். பிரதமர் இதன் தலைவராக செயல்படுவார்.

**நிதி ஆயோக் கூட்டம்**

இந்நிலையில், டெல்லி ஜனாதிபதி மாளிகை வளாகத்தில் உள்ள கலாசார மையத்தில் நிதி ஆயோக் கவுன்சிலின் 11–வது கூட்டம் பிரதமர் மோடி தலைமையில் தொடங்கியது

.நிதி ஆயோக் கூட்டத்தில் முதலமைச்சர்கள், யூனியன் பிரதேசங்களின் துணைநிலை ஆளுநர்கள் பங்கேற்றனர்.

இந்த கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் விஜயும் பங்கேற்றார். நிதி ஆயோக் கூட்டத்தில் தமிழகத்திற்கான திட்டங்கள் குறித்து முதலமைச்சர் விஜய் வலியுறுத்த வாய்ப்பு உள்ளது.

# தமிழகத்தில் 5 தொகுதிகளுக்கு விரைவில் இடைத்தேர்தல்: முன்னேற்பாடு பணிகளை தொடங்கிய தேர்தல் கமிஷன்!

சென்னை, ஜூன். 11–

முதல்–அமைச்சர் விஜய், பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு ஆகிய 2 தொகுதிகளில் போட்டியிட்டு வென்றார். இதில் திருச்சி கிழக்கு தொகுதி உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தார். அதேபோல் அ.தி.மு.க.வை சேர்ந்த ஜெயக்குமார் (பெருந்துறை), மரகதம் குமரவேல் (மதுராந்தகம்), சத்யபாமா (தாராபுரம்), இசக்கி சுப்பையா (அம்பாசமுத்திரம்) ஆகிய 4 பேரும் தங்களின் எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்துவிட்டு த.வெ.க.வில் இணைந்தனர்.

இதையடுத்து மேற்கண்ட 5 தொகுதிகளும் காலியாகிவிட்டன. இந்த 5 தொகுதிகளுக்கும் விரை



வில் இடைத்தேர்தல் நடைபெறவுள்ளது. அதற்கான முன்னேற்பாடு பணிகளை தேர்தல் கமிஷன் தொடங்கிவிட்டது. இது தொடர்பாக செங்கல்பட்டு, திருச்சி, ஈரோடு, திருப்பூர், நெல்லை மாவட்ட கலெக்டர்களுக்கு தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் எழுதிய கடிதத்தில் கூறப்பட்டு இருப்பதாவது:–

திருச்சி கிழக்கு, பெருந்துறை, மதுராந்தகம், தாராபுரம், அம்பாசமுத்திரம் ஆகிய 5 பேரும் தங்களின் எம்.எல்.ஏ பதவியை ராஜினாமா செய்ததை தொடர்ந்து 5 தொகுதிகளும் காலியாகிவிட்டன. இந்த 5 தொகுதிகளுக்கும் இடைத்தேர்தலை தேர்தல் கமிஷன் அறிவிக்கும். எனவே அதற்கான அறிவிப்பு வந்தவுடன் தேர்தல் நடைமுறைகள் தொடங்க தயாராக இருக்க வேண்டியது அவசியமாகும்.

உங்கள் மாவட்டங்களில் தேர்தல் நடத்தும் அதிகாரி, உதவி தேர்தல் நடத்தும் அதிகாரி தயார் நிலையில் இருக்கின்றனரா?. இடைத்தேர்தல் நடக்கும் தொகுதியின் ஏதாவது பாகங்கள், வேறு மாவட்டங்களுக்குள்ளும் வருகிறதா? மாநகராட்சிக்குள் தொகுதி வருகிறதா? என்பது பற்றிய விவரங்களை 5 மாவட்ட கலெக்டர்களும் வருகிற 22–ந் தேதிக்குள் தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## உச்சகட்ட போர் பதற்றம்!

# ஈரான் அதிரடி தாக்குதல்! அமெரிக்க தளங்கள் குறிவைப்பு!

## ஹார்முஸ் மூடலால் உலகம் கவலை!!







வாஷிங்டன், ஜூன். 11–

மேற்கு ஆசியாவில் போர் பதற்றம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அமெரிக்காவின் வான்வழித் தாக்குதல்களுக்கு பதிலடியாக, குவைத் மற்றும் பஹ்ரைனில் உள்ள பல முக்கிய அமெரிக்க ராணுவத் தளங்களை தாக்கியதாக, ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர பாதுகாப்புப் படை (IRGC) கூறியுள்ளது. மேலும், ஹார்முஸ் ஜலசந்தியை முழுமையாக மூடுவதாக ஈரான் அறிவித்ததோடு, அனைத்து கப்பல்களும் அப்பகுதியை விட்டு விலகி இருக்குமாறு எச்சரிக்கை விடுத்துள்ளது.

குவைத், பஹ்ரைனில் 18 இலக்குகள் மீது ஈரான் தாக்குதல்?

அமெரிக்காவிற்கு பதிலடி கொடுக்கும் விதமாக, குவைத்தில் உள்ள அலி அல்–சலேம் மற்றும் அகமது அல்–ஜாபர் விமானத் தளங்கள், பஹ்ரைனில் உள்ள ஷேக் ஈசா விமானத் தளம் உள்ளிட்ட 18 முக்கிய அமெரிக்க ராணுவத் தளங்களை குறிவைத்ததாக ஐ.ஆர்.ஜி.சி. ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது. ஈரானிய ராணுவத்தின் கூற்றுப்படி, ஈரானுக்குள் அமெரிக்கா நடத்திய தாக்குதல்களுக்கு பதிலடியாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா வான்வழித் தாக்குதல்:

இதனிடையே, தொடர்ந்து இரண்டாவது நாளாக, அமெரிக்க மத்திய கட்டளைப் பிரிவு (CENTCOM) ஈரானுக்குள் உள்ள பல இடங்கள் மீது வான்வழித் தாக்குதல்களை நடத்தியது. இந்த தாக்குதல்களை "தற்காப்புக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்" என அமெரிக்கா கூறுகிறது. ஈரானிய ஊடகங்களின் தகவல்களின்படி, இந்த தாக்குதல்களின் போது, நாட்டின் தென்பகுதிகளிலும், மேற்கு டெஹ்ரானிலும் வெடிச்சத்தங்கள் கேட்டுள்ளன. பல பகுதிகளில் வான் பாதுகாப்பு அமைப்புகளும் செயல்படுத்தப்பட்டுள்ளன.

கப்பல்களுக்கு எச்சரிக்கை விடுப்பு:

அமெரிக்க தாக்குதல்களைத் தொடர்ந்து, உலகின் மிக முக்கியமான கடல்வழி எண்ணெய் பாதைகளில் ஒன்றாகக் கருதப்படுவதும், உலகளாவிய எண்ணெய் விநியோகத்தின் பெரும் பகுதி கடந்து செல்வதுமான ஹார்முஸ் ஜலசந்தியை முழுமையாக மூடுவதாக ஈரானின் உயர்மட்ட ராணுவத் தலைமை அறிவித்தது. அனைத்து கப்பல்களும் அப்பகுதியிலிருந்து விலகி இருக்குமாறு ஈரான் எச்சரித்தது.

மூடப்பட்டிருந்த ஹார்முஸ் ஜலசந்தியை கடக்க முயன்ற இரண்டு கப்பல்களை, தங்கள் படைகள் குறிவைத்ததாக ஐ.ஆர்.ஜி.சி. கூறியது. இதற்கு பதிலடியாக, அதன் வான்வெளி மற்றும் கடற்படைப் பிரிவுகள் இரண்டு கட்டங்களாக, அமெரிக்க படைகள் தங்கியிருந்த ராணுவத் தளங்களைத் தாக்கின.

**"ஹார்முஸ் பகுதியை நரகமாக மாற்றுவோம்"**

ஐ.ஆர்.ஜி.சி–யின் வான்வெளிப் படையின் தலைவர் மேஜர் ஜெனரல் மஜித் மூசாவி, அமெரிக்காவின் தாக்குதல்களுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். தஸ்னிம் என்ற ஈரானிய செய்தி நிறுவனத்தின் அறிக்கையின்படி, அமெரிக்கா ஹார்முஸ் ஜலசந்தியை பாதுகாப்பற்றதாக மாற்ற முயன்றால், ஈரான் அந்த முழு பிராந்தியத்தையும் அவர்களுக்காக நரகமாக மாற்றிவிடும் என்று அவர் கூறியுள்ளார்.

மேலும், "புனிதமான ஹார்முஸ் ஜலசந்தியை பாதுகாப்பற்றதாக மாற்றுகிறீர்களா.? ஈரான் முழுவதிலிருந்தும் இந்த பிராந்தியத்தை உங்களுக்காக நரகமாக மாற்றுவோம்" என்று மூசாவி கூறினார்.

அதோடு, "இந்த பிராந்தியத்தில் அமெரிக்கர்களின் இந்த துணிச்சலான செயலுக்கு நிச்சயம் பதிலடி கொடுக்கப்படும்" என்றும் அவர் கூறியுள்ளார்.

இதனால், மத்திய கிழக்கில் மீண்டும் போர் பதற்றம் உச்சகட்டத்தை எட்டியுள்ளது. மேலும், ஹார்முஸ் மீண்டும் முடக்கப்பட்டதால், உலகலாவிய எரிபொருள் தட்டுப்பாடு அதிகரிக்கும் நிலை உருவாகியுள்ளது. இது, உலக நாடுகளிடையே கவலையை மேலும் அதிகரித்துள்ளது. ட்ரம்ப்பும் பதிலடி எச்சரிக்கைகளை விடுத்து வருவதால், இரு நாடுகளுக்கும் இடையே மீண்டும் பெரிய அளவில் போர் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளது.






# முன்னாள் முதல்வர்கள் பாணியில் கொல்லூர் மூகாம்பிகையை தரிசிக்கும் முதலமைச்சர் விஜய்!



சென்னை, ஜூன். 11–

முதலமைச்சர் விஜய் தேர்தல் முடிவு வெளிவருவதற்கு முன்பே திருச்செந்தூர் சென்று முருகனை வழிப்பட்டார். அது முருகப்பெருமான் அசுரர்களை போரில் வென்ற திருத்தலம்.

அதே போல் தேர்தல் போரில் எதிரிகளை வெல்ல வேண்டும் என்ற வேண்டுதலுடன் விஜய்யும் சென்றார். நினைத்ததை போலவே வென்றார். ஆட்சி அமைத்தார்.

இப்போது யாரும் எதிர்பாராத வகையில் ஜூன். 12 (வெள்ளிக்கிழமை) புகழ்பெற்ற கொல்லூர் மூகாம்பிகை கோவிலுக்கு சென்று வழிபட திட்டமிட்டுள்ளார்.


அவரது இந்த திடீர் ஆன்மிக பயணம் ஆச்சரியத்தை ஏற்படுத்தினாலும் எல்லோரது பார்வையும் கொல்லூரை நோக்கி திரும்பி உள்ளது.




## தலையங்கம் மதுரை மணி

வியாழக்கிழமை 11.06.2026
விசுவாவசு தமிழ் வருடம்
வைகாசி மாதம் 28-ம் தேதி

## ஒற்றுமையா? குழப்பமா? INDIA கூட்டணி!




இந்தியா கூட்டணி கட்சிகளின் ஆலோசனை கூட்டம் டெல்லியில் நடந்தது. இந்த கூட்டத்தில் மொத்தம் 23 அரசியல் கட்சிகள் பங்கேற்றுள்ளன. இந்தியா கூட்டணி தொடங்கியதிலிருந்து அக்கூட்டணியின் மைய சக்தியாக திராவிட முன்னேற்றக் கழகம் இயங்கியது., இந்தியா கூட்டணிக் கூட்டத்தில், அதாவது காங்கிரஸ் பங்கேற்கும் கூட்டத்தில் திமுக பங்கேற்காது என மு.க.ஸ்டாலின் ஏற்கனவே அறிவித்து விட்டார். ஆம் ஆத்மியும் பங்கேற்கவில்லை. டெல்லி முழுவதும் ராகுல் காந்தி மற்றும் காங்கிரசுக்கு எதிராக பரபரப்பு போஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளன. அதில் 20 ஆண்டுகளுக்கும் மேலாக காங்கிரஸ் நம்மை சார்ந்து வளர்ந்து வந்தது.

ஆனால் இன்று அவர்கள் நம்மை முதுகில் குத்திவிட்டார்கள் என இருந்தது. இதுபோன்று மேற்குவங்க முன்னாள் முதல்வர் மம்தா பானர்ஜி, தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார், டெல்லி முன்னாள் முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால், பஞ்சாப் ஆம் ஆத்மி முதல்வர் பகவந்த் மான் மற்றும் பிற தலைவர்களின் பெயரிலும் போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருந்தது. அதில் காங்கிரஸ் கட்சியை சார்ந்து இருக்க முடியாது என்ற வாசகங்களும் டெல்லி வீதிகளில் இடம்பெற்று இருந்தன.

தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி அமைத்துள்ள தவெகவுக்கு அழைப்பு விடுக்கவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ள கட்சிக்கு மட்டுமே இந்த கூட்டத்தில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டு இருப்பதாக காங்கிரஸ் கூறியுள்ளது. மேற்குவங்க சட்டமன்ற தேர்தலில் மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணாமுல் காங்கிரஸ் கட்சி, ஆட்சியை இழந்ததை தொடர்ந்து, அக்கட்சியில் உட்கட்சிப் பூசல் மற்றும் கடுமையான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. தற்போது திரிணாமுல் காங்கிரஸ் கட்சியில் அதிருப்தி அடைந்த எம்எல்ஏக்கள், எம்பிக்கள் பலர் வெளியேறும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

சிவ சேனாவின் தலைவர் உத்தவ் தாக்கரே பங்கேற்கவில்லை. தேசியவாத காங்கிரஸ் எம்.பி. சுப்ரியா சுலே பங்கேற்றார். தமிழகத்திலிருந்து வைகோ, திருமா உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்றுள்ளனர். கூட்டத்துக்கு பிறகு விசிக தலைவர் திருமாவளவன் பரபரப்பு குற்றச்சாட்டை கூறியுள்ளார். அதில், காங்கிரஸ் செயல் விருப்பத்தக்கது அல்ல. நடந்து முடிந்த தேர்தலில் காங்கிரஸ் செயல்பாடு திமுக, திரிணாமுல், மார்க்சிஸ்ட்டை பலவீனப்படுத்தி உள்ளது. காங்கிரஸ் கட்சி கையாண்ட அணுகுமுறையால் இந்தியா கூட்டணியில் உள்ள கட்சிகளிடையே அதிருப்தி நிலவி வருகிறது. காங்கிரஸ் தனது செயல்பாடுகளை சுயபரிசோதனை செய்ய வேண்டும். ஒற்றுமையை இன்னும் வலுவாக முன்னெடுப்பதற்கான வழிகளை கண்டறிய வேண்டும் என கூறியுள்ளார்.

பாஜ அரசுக்கு எதிராக தேசிய அளவில் வலுவாக இருந்த இந்தியா கூட்டணியை சுயநலத்துக்காக காங்கிரஸ் பலவீனப்படுத்திவிட்டது. குறிப்பாக மாநில கட்சிகள் கூடவே இருந்து அதன் வளர்ச்சியை முடித்து வைத்து விட்டதாக அரசியல் நோக்கில் பார்க்கப்படுகிறது. இது ஒரு பலவீனமான கூட்டணி என பெயரெடுத்தள்ளது. மொத்தத்தில் இந்தியா கூட்டணி கூட்டம் ஒருமித்த கருத்துகள் எடுக்கப்படாமல் தள்ளாடும் கூட்டமாக முடிந்துவிட்டது.



தேனி மாவட்டம் காமாட்சிபுரம் கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்புமுகாமில் 522 பயனாளிகளுக்கு ரூபாய் 2,09,63,699 மதிப்பீட்டில் அரசின்பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் வைத்திநாதன் வழங்கினார். உடன் கம்பம் எம்.எல்.ஏ. ஜெகநாத் மிஸ்ரா உள்ளார்.

# சொந்த ஊரில் பாரதிராஜா உடல் - அரசு மரியாதையுடன் நல்லடக்கம்!




பாரதிராஜாவின் உடல் ஜூன். 10 இரவு 9 மணி வரை நீலாங்கரை இல்லத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து அவரது சொந்த ஊரான தேனிக்கு எடுத்து செல்லப்பட்டது.

**தேனியில் உடல் அடக்கம்**

இந்நிலையில் சென்னையில் இருந்து சொந்த ஊரான தேனி மாவட்டம் வத்தலக்குண்டு காட்ரோடு அருகேயுள்ள அவரது பண்ணை வீட்டிற்கு கொண்டு செல்லப்பட்ட பாரதிராஜாவின் உடலுக்கு உறவினர்கள், ஊர்க்காரர்கள், ரசிகர்கள் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

பண்ணை வீட்டில் வைக்கப்பட்ட இயக்குநர் இமயம் பாரதிராஜா உடலுக்கு அஞ்சலி செலுத்திய நடிகை சுஹாசினி அவரது மனைவியை கட்டியணைத்து ஆறுதல் கூறினார். அவரது உடலுக்கு இறுதி சடங்குகள் நடத்தப்பட்டு, அரசு மரியாதையுடன் உடல் அடக்கம் செய்யப்பட்டது. மேலும் கவிஞர் வைரமுத்து, நடிகர் வடிவேலு உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

# ரூபாய் நோட்டுகளுக்கு பதிலாக பிளாஸ்டிக் நோட்டுகளை அறிமுகப்படுத்துகிறதா ரிசர்வ் வங்கி?


பிளாஸ்டிக் ரூபாய் நோட்டுகள்

புதுடெல்லி, ஜூன். 11–

பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ள காகித ரூபாய் நோட்டுகள் கிழிந்து போவதால், அதற்குப் பதிலாக அதிக ஆயுட்காலம் கொண்ட பிளாஸ்டிக் ரூபாய் நோட்டுகள் வருகிற 30–ந் தேதி முதல் அறிமுகமாக உள்ளதாகச் சமூக வலைத்தளங்களில் ஒரு தகவல் தீயாய் பரவி வருகிறது. இது பொதுமக்களிடையே தேவையில்லாத பதற்றத்தையும், அச்சத்தையும் ஏற்படுத்தி இருந்தது.

இந்நிலையில், இந்த விவகாரம் குறித்து மத்திய அரசின் பத்திரிகை தகவல் அலுவலகம் விளக்கம் அளித்துள்ளது. பிளாஸ்டிக் ரூபாய் நோட்டுகளை அறிமுகப்படுத்தும் திட்டம் எதுவும் தற்போது இல்லை என்று ரிசர்வ் வங்கி திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது. எனவே, காகித நோட்டுகள் செல்லாது என்று பரவும் வதந்திகளைப் பொதுமக்கள் நம்ப வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# தி.மு.க. கூட்டணிக்கு குட்பை சொன்ன CPI!



கோவை, ஜூன். 11–

கோவையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் வீரபாண்டியன் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:–

* தற்போதைய சூழலில் தி.மு.க. கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியால் தொடர முடியாத நிலை உள்ளது. இதைவிட அழுத்தமாக சொல்ல முடியாது என விளக்கம்.

* கடந்த இரண்டு நாட்களாக நடத்திய ஆலோசனையை தொடர்ந்து தி.மு.க. கூட்டணியில் இருந்து விலக முடிவு செய்யப்பட்டது.

* திமுக, அதிமுக, தவெக ஆகிய கட்சிகள் ஜனநாயக கட்சிகள் என்றார்.

த.வெ.க. அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவு அளித்து வரும் நிலையில் தி.மு.க. கூட்டணியில் இருந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி விலகியது. சட்டசபை தேர்தல் முடிவுகளக்கு பிறகு காங்கிரஸ், மார்க்சிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகள் தி.மு.க. கூட்டணியில் இருந்து விலகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# 22% முதல் 30% எத்தனால் கலந்த பெட்ரோலுக்கு கலால் வரி விலக்கு!




புதுடெல்லி, ஜூன். 11–

ஈரான் போர், ஹார்முஸ் ஜலசந்தி மூடல் காரணமாக மத்திய கிழக்கில் இருந்து ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளதால் உலகளவில் எரிபொருள், எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்தியாவிலும் கச்சா எண்ணெய் வரத்து குறைந்து பெட்ரோல், டீசல் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

இந்நிலையில் 22% முதல் 30% வரை எத்தனால் கலக்கப்படும் பெட்ரோலுக்கு மத்திய கலால் வரியில் இருந்து முழு விலக்கு அளிப்பதாக மத்திய நிதி அமைச்சகம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

இதில் 22%, 25%, 27% and 30% ஆகிய கலப்பு வகைகள் அடங்கும்.

முன்னதாக 20% வரையிலான எத்தனால் கலப்பிற்கு மட்டுமே வரி சலுகைகள் இருந்த நிலையில், தற்போது அந்த வரம்பு 30% வரை உயர்த்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்ட அரசிதழில், இந்தியத் தர நிர்ணய அமைப்பான பிஐஎஸ் பரிந்துரைத்துள்ள விதிகளின்படி தயாரிக்கப்படும் எத்தனால் கலப்பு பெட்ரோல் வகைகளுக்கு கலால் வரி கிடையாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக 20% வரையிலான எத்தனால் கலப்பிற்கு மட்டுமே வரி சலுகைகள் இருந்த நிலையில், தற்போது அதனை 30% ஆக உயர்த்தியிருப்பது

ஏற்கனவே மத்திய அரசு எத்தனால் கலந்த பெட்ரோலை ஊக்குவித்து வரும் நிலையில் இந்த வரிக்குறைப்பு வந்துள்ளது. ஆனால் எத்தனால் கலந்த பெட்ரோல் வாகனங்களின் நீண்டகால செயல்திறனை பாதிக்கும் என்ற விமர்சனம் பலரால் முன்வைக்க ப்படுகிறது. மத்திய நெடுஞ்சாலை துறை அமைச்சர் நிதின் கட்கரியின் இரு மகன்கள் எத்தனால் தயாரிப்பு தொழிலில் உள்ளதால் அவர்களின் சொந்த நலன்களுக்காக எத்தனால் கலந்த பெட்ரோலை மத்திய அரசு தொடர்ந்து மக்களிடம் திணித்து வருவதாக எதிர்க்கட்சி தரப்பில் விமர்சனம் வைக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

# அழிவின் விளிம்பில்.. தாய் கட்சி காங்கிரஸில் கரையும் திரிணாமுல் காங்கிரஸ்?



புதுடெல்லி, ஜூன். 11–

மேற்கு வங்க சட்டசபை தேர்தலில் தோல்வியை தழுவிய பின் மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணாமுல் காங்கிரஸ் கட்சி பிளவுபட்டு வருகிறது.

முதலில் 80 எம்எல்ஏக்களில் 52 பேர் தனி அணியாக பிரிந்தனர். தற்போது திரிணாமுல் காங்கிரஸ் பாராளுமன்ற எம்பிக்களும் கட்சியை கைவிட்டு பாஜக பக்கம் தாவ உள்ளதாக கூறப்படுகிறது. சத்ருகன் சின்ஹா, யூசுப் பதான் உள்ளிட்டோர் இந்த கிளர்ச்சி எம்பிக்கள் லிஸ்டில் உள்ளனர். இந்த தொடர் அடிகளால் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியே அழியும் சூழல் உருவாகியுள்ளதாக அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

இந்நிலையில் திரிணாமுல் காங்கிரசை அழிவில் இருந்து தடுக்க, அக்கட்சியை காங்கிரஸ் உடன் இணைக்க பேச்சுவார்த்தை நடந்து வரவதாக செய்திகள் பரவின.

டெல்லியில் காங்கிரஸ் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சோனியா காந்தியை, மம்தா பானர்ஜி நேரில் சந்தித்துப் பேசியதைத் தொடர்ந்து இரு கட்சிகளும் இணையப் போவதாக ஊடகங்களில் செய்திகள் பரவின. இந்த யூகங்களை மறுத்துள்ள காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் தனது எக்ஸ் பக்கத்தில், "சோனியா காந்தி – மம்தா பானர்ஜி இடையேயான சந்திப்பு முற்றிலும் தனிப்பட்ட மற்றும் நட்பு ரீதியிலானது. இரு கட்சிகளின் இணைப்பு குறித்து எந்தவொரு திட்டமும் பரிசீலனையில் இல்லை. பரப்பப்படும் செய்திகள் யாவும் முற்றிலும் உண்மைக்கு புறம்பானவை," என்று தெளிவுபடுத்தியுள்ளார். அதேநேரம் தாங்கள் திரிணாமுல் காங்கிரஸிலேயே தொடர்வதாகவும், காங்கிரசில் இணையவில்லை என்றும் அதிருப்தி எம்எல்ஏக்கள் குழு தலைவரும் மேற்கு வங்க எதிர்க்கட்சித் தலைவருமான ரிதாப்ரதா பானர்ஜி தெரிவித்துள்ளார்.

இதனிடையே இந்தியா கூட்டணியை வலுப்படுத்துவது ஒன்றே தங்கள் நோக்கம் என காங்கிரஸ் தெரிவித்துள்ளது. அண்மையில் நடந்த இந்தியா கூட்டணி கூட்டத்தில் மம்தா கலந்து கொண்டார் . முன்னதாக 1998 இல் காங்கிரசில் இருந்து பிரிந்து மம்தா பானர்ஜி தொடங்கியதே திரிணாமுல் காங்கிரஸ் என்பது குறிப்பிடத்தக்கது.



## ஜூன் 17 முதல் இந்த ராசிகளுக்கு யோகம்!




ஜோதிடத்தில் கிரகங்களுக்குச் சிறப்பான முக்கியத்துவம் உண்டு. கிரகங்கள் அவ்வப்போது தங்கள் ராசி அல்லது நட்சத்திரத்தை மாற்றிக்கொண்டே இருக்கும். தற்போது ஜூன் மாதம் தொடங்கியுள்ளது; இம்மாதத்தில் பல கிரகங்கள் தங்கள் இடங்களை மாற்றவுள்ளன. இதனால், பல 'ராஜ யோகங்கள்' மற்றும் 'தன யோகம்' ஆகியவை இம்மாதத்தில் உருவாகவுள்ளன.

ஜூன் 17 அன்று சந்திரன் கடக ராசிக்குள் நுழையவுள்ளார். ஏற்கனவே குரு மற்றும் சுக்கிரன் ஆகிய கிரகங்கள் அந்த ராசியில் சஞ்சரித்து வருகின்றன. இந்த மூன்று கிரகங்களின் சேர்க்கை ஒரு அபூர்வமான 'தன யோகத்தை' உருவாக்கும். இதன் விளைவாக, நான்கு ராசிக்காரர்களுக்குச் செல்வச் செழிப்பு உண்டாகும். இப்போது, இந்தத் தன யோகத்தால் எந்தெந்த ராசிக்காரர்களுக்கு நன்மைகள் கிடைக்கவுள்ளன என்று பார்ப்போம்.

கடகம்: தன யோகத்தால் கடக ராசிக்காரர்களுக்குச் சிறப்பான பலன்கள் கிடைக்கும். பொருளாதார ரீதியாக நிலைமை சீரடையும்; வருமானம் அதிகரிக்கும். நீண்ட காலமாகப் பண நெருக்கடியைச் சந்தித்து வந்தவர்கள் அதிலிருந்து விரைவில் விடுபடுவார்கள். இந்த காலகட்டத்தில் இவர்களுக்குப் பணத் தட்டுப்பாடு இருக்காது.

துலாம்: துலாம் ராசிக்காரர்களின் வருமானம் பெருமளவு அதிகரிக்கும். நீண்ட காலமாகத் தங்கள் கடின உழைப்பிற்கான பலன் கிடைக்காமல் சிரமப்படுபவர்களுக்கு இது ஒரு நல்ல காலகட்டமாகும். அவர்கள் தங்கள் பணிகளை விரைவாகவும் குறித்த நேரத்திலும் முடிப்பார்கள். வீட்டிலும் வெளியிலும் மகிழ்ச்சியான சூழல் நிலவும்; அனைத்து வகையிலும் நன்மைகள் கைகூடும்.

மீனம்: மீன ராசிக்காரர்களுக்கு இது மிகவும் சாதகமான காலகட்டமாகும். குறிப்பாக, நீண்ட காலமாக வீடு கட்ட வேண்டும் என்று கனவு கண்டுகொண்டிருந்தவர்களுக்கு இக்காலம் மிகவும் ஏற்றதாக அமையும். புதிய வாகனம் வாங்கும் வாய்ப்பும் இவர்களுக்குக் கிடைக்கும். பொருளாதார ரீதியாக அனைத்தும் இவர்களுக்குச் சாதகமாகவே இருக்கும்.

கன்னி: கன்னி ராசிக்காரர்கள் விரைவில் செல்வந்தர்களாகும் வாய்ப்புள்ளது. வருமானம் அதிகரிக்கும்; கடன்களிலிருந்து விரைவில் விடுபடுவார்கள். நீண்ட காலமாக நல்ல வேலை கிடைக்க வேண்டும் என்று விரும்பியவர்களுக்கு இக்காலம் நல்ல பலனைத் தரும். அனைத்து வகையிலும் அவர்களுக்குப் பொருளாதார நன்மைகள் கிடைக்கும்.

## சினிமா துளிகள்..!

## பாலிவுட்டில் சோகம்... ஹாலிவுட்டில் பரபரப்பு!




**பாலிவுட்:**

முன்னாள் CBFC தலைவர் மற்றும் தயாரிப்பாளர் Pahlaj Nihalani சமீபத்தில் காலமானது பாலிவுட் திரையுலகில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

Ram Charan தனது வெற்றிப்படமான Peddiக்கு பிறகு பாலிவுட் மற்றும் பிராந்திய இயக்குநர்களுடன் இணைந்து பணியாற்ற விருப்பம் தெரிவித்துள்ளார்.

Hai Jawani Toh Ishq Hona Hai படம் வெளியாகி முதல் நாளில் எதிர்பார்த்த வசூலை பெறாமல் மெதுவான தொடக்கத்தை கண்டுள்ளது.

படத்தில் Shah Rukh Khan நடித்து வருகிறார். 2026 கிறிஸ்துமஸ் வெளியீட்டை நோக்கி படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது.

**ஹாலிவுட்:**

பிரபல நடிகை Emily Blunt தனது புதிய படங்களான Disclosure Day மற்றும் A Quiet Place Part III குறித்து பேட்டி அளித்து ரசிகர்களின் கவனத்தை ஈர்த்துள்ளார்.

ஹாலிவுட்டில் சுயாதீன திரைப்படங்கள் அதிக வரவேற்பு பெறுவதால், பெரிய ஸ்டுடியோக்கள் மற்றும் புதிய படைப்பாளிகள் இடையே விவாதம் உருவாகியுள்ளது.

Chris Meledandri ஹாலிவுட் வாக் ஆஃப் ஃபேமில் நட்சத்திர கௌரவம் பெற்றுள்ளார்.




## நுரையீரலை சேதப்படுத்தும் செயல்கள்!




நாம் ஆரோக்கியமாக இருக்க, நம் உடலின் அனைத்துப் பாகங்களும் சரியாகச் செயல்பட வேண்டும். அதேபோல, உடல் உறுப்புகள் சரியாகச் செயல்படச் சரியான சத்துக்கள் நிறைந்த உணவை நாம் உட்கொள்ள வேண்டும். ஆனால், தற்போதைய உணவுப் பழக்கவழக்கங்கள் நம் உடலின் மிக முக்கியமான உறுப்பான நுரையீரலைப் பாதிக்கின்றன. முன்பு காற்று மாசுபாட்டால் மட்டுமே பாதிக்கப்பட்ட நுரையீரல், இப்போது நாம் உண்ணும் உணவுகளாலும் பாதிக்கப்படுகிறது. எனவே, நுரையீரல் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமானால், பின்வரும் உணவுகளைத் தவிர்ப்பது அவசியம் என்று சுகாதார நிபுணர்கள் கூறுகின்றனர்.

பொரித்த உணவுகள் மற்றும் உப்பு: உப்பு நம் அன்றாட வாழ்வில் முக்கியப் பங்கு வகிக்கிறது; அது இல்லாமல் எந்த உணவையும் நாம் உட்கொள்ள முடியாது. அதே சமயம், உணவில் உப்பு அதிகமாக இருந்தால் அது ஆரோக்கியத்திற்குத் தீங்காக அமைகிறது. அதிகப்படியான உப்பு உட்கொள்ளல் நுரையீரலையும் பாதிக்கலாம்; எனவே, உப்பின் அளவைக் குறைத்துக்கொள்வது நல்லது. அதுமட்டுமின்றி, பொரித்த உணவுகளும் நுரையீரல் ஆரோக்கியத்திற்குத் தீங்கு விளைவிக்கின்றன. எனவே, பொரித்த உணவுகளைக் குறைவாக உட்கொள்வது அல்லது முற்றிலும் தவிர்ப்பது சிறந்தது.

பால் சார்ந்த பொருட்கள்: பால், தயிர் மற்றும் சீஸ் (cheese) போன்ற பால் சார்ந்த பொருட்கள் ஆரோக்கியத்திற்கு நல்லது என்றாலும், அவற்றை அளவுக்கு அதிகமாக உட்கொள்வது நுரையீரலுக்குத் தீங்கு விளைவிக்கலாம். சிலருக்கு, பால் மற்றும் சீஸ் போன்றவற்றை அதிகமாக உட்கொள்வது சுவாசப் பாதையில் அதிகப்படியான சளி உற்பத்தியை ஏற்படுத்தக்கூடும். உங்களுக்கு ஏற்கனவே இருமல் அல்லது ஆஸ்துமா பிரச்சனை இருந்தால், இவற்றின் அளவைக் குறைத்துக்கொள்வது நல்லது.

மதுபானம்: அளவுக்கு அதிகமான மது அருந்துதல் நுரையீரலைப் பாதிக்கலாம். மதுவில் உள்ள சல்பேட்டுகள் (sulfates) ஆஸ்துமா அறிகுறிகளை மோசமாக்கலாம், மேலும் அதில் உள்ள எத்தனால் (ethanol) நுரையீரலில் உள்ள செல்களைப் பாதிக்கலாம். அதிகப்படியான மது அருந்துதல் நிமோனியா மற்றும் பிற நுரையீரல் பிரச்சனைகளையும் ஏற்படுத்தலாம். அதுமட்டுமின்றி, மது அருந்துதல் நுரையீரலின் நோய் எதிர்ப்பு சக்தியையும் குறைக்கிறது; இதனால் நுரையீரல் எளிதில் நோய்த்தொற்றுகளுக்கு ஆளாகிறது. எனவே, மது அருந்துவதைத் தவிர்ப்பது மிகவும் நல்லது.

புகைபிடித்தல்: பீடி, சிகரெட் போன்றவற்றை புகைக்கும்போது, அந்தப் புகை நேரடியாக நுரையீரலுக்குள் செல்கிறது. இது நுரையீரல் ஆரோக்கியத்தை முற்றிலும் பாதிக்கிறது. எனவே, புகைபிடிப்பதை முற்றிலும் தவிர்க்க வேண்டும். மேலும், பதப்படுத்தப்பட்ட இறைச்சி (processed meat) வகைகளை உட்கொள்வதைக் குறைக்கவும். ஏனெனில், அவற்றை நீண்ட காலம் கெடாமல் வைத்திருக்க நைட்ரைட்டுகள் (nitrites) பயன்படுத்தப்படுகின்றன. இவை நுரையீரலில் வீக்கம் மற்றும் அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன; எனவே, பதப்படுத்தப்பட்ட இறைச்சி நுரையீரலுக்குத் தீங்கு விளைவிக்கலாம்.

மென்பானங்கள் (Soft drinks): மென்பானங்கள், பாக்கெட்டுகளில் அடைக்கப்பட்ட பழச்சாறுகள் மற்றும் இனிப்புகளில் சர்க்கரையின் அளவு அதிகமாக உள்ளது. இது நுரையீரலின் செயல்பாட்டை மந்தமாக்கக்கூடும். மேலும், இது பெரியவர்களிடையே நாள்பட்ட மூச்சுக்குழாய் அழற்சி (chronic bronchitis) ஏற்படும் அபாயத்தை அதிகரிக்கிறது. எனவே, உங்கள் நுரையீரலைப் பாதுகாக்கவோ அல்லது நீண்ட காலம் வாழவோ விரும்பினால், இந்த மென்பானங்களிலிருந்து முடிந்தவரை விலகி இருப்பதே சிறந்தது.

# அனைத்து டெண்டர்களும் நிறுத்தம்; அறநிலையத் துறை!




சென்னை, ஜூன். 11–

தமிழக அரசின் இந்து சமய அறநிலையத் துறை, அதன் கட்டுப்பாட்டில் உள்ள கோயில்களின் திருப்பணிகள், பராமரிப்பு மற்றும் அன்றாடச் சேவைகளுக்கான ஒப்பந்தப் புள்ளிகளை (டெண்டர்) ‘1998–ம் ஆண்டு தமிழ்நாடு டெண்டர் வெளிப்படைத்தன்மை சட்டத்தின்’ கீழ் மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில் கடந்த திமுக ஆட்சிக்காலத்தில் விடப்பட்ட கோயில் டெண்டர்களில் முறைகேடுகள் நடந்ததாகவும், ஒரு குறிப்பிட்ட தரப்பினருக்கு மட்டுமே ஆதரவாக டெண்டர்கள் வழங்கப்பட்டதாகவும் புகார்கள் எழுந்தன. இதையடுத்து, அறநிலையத் துறையில் நிலவும் டெண்டர் நடைமுறைகளைச் சீரமைக்க அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

அந்த வகையில், புதிய வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்படும் வரை, இந்து சமய அறநிலையத் துறையின் அனைத்து டெண்டர் நடவடிக்கைகளும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் ஒருதலைப்பட்சமாக வழங்கப்பட்டதாகக் கருதப்படும் சில கோயில் டெண்டர்களை ரத்து செய்யத் துறை செயலாளர் குமரகுருபரன் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

## ரயில்வே பராமரிப்பு: சாத்தூர்-விருதுநகர் உட்பட 2 நாட்கள் மூடல்.. மாற்று வழி அறிவிப்பு !




சென்னை, ஜூன். 11–

ரயில்வே இருப்பு பாதையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள இருப்பதால், 11.06.2026 அன்று காலை 10.00 மணி முதல் மாலை 06.00 வரையில் சாத்தூர்–விருதுநகர் வழித்தடங்களும், 12.06.2026 அன்று காலை 10.00 மணி முதல் மாலை 06.00 வரையில் மத்தியசேனை–சங்கரலிங்காபுரம் மற்றும் அழகாபுரி–மீசலூர் ஆகிய வழித்தடங்கள் மூடுவதாக இரயில்வே நிர்வாகம் அறிவித்துள்ளது.

# பரபரப்பு.. டெல்லியில் முதல்வர் விஜய் தங்கியிருந்த இல்லத்தில் தீ விபத்து..!




புதுடெல்லி, ஜூன். 11–

3 நாள் அரசு முறை பயணமாக முதல்வர் விஜய் 2–வது முறையாக 10–ம் தேதிடெல்லி சென்றார்.. பிரதமர் மோடி தலைமையில் நடைபெறும் நிதி ஆயோக் ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்பதற்காக அவர் தற்போது டெல்லியில் தங்கி உள்ளார். முதல்வர் விஜய் தங்கியிருந்த டெல்லி தமிழ்நாடு இல்லத்தில் சிறிய தீ விபத்து ஏற்பட்டது.. தமிழ்நாடு இல்லத்தில் உள்ள உணவகத்தில் அனைவரும் அமர்ந்து சாப்பிடும் போது சிறிய தீ விபத்து ஏற்பட்டுள்ளது.. இதனால் சிறிது நேரம் அங்கு பரபரப்பான சூழல் நிலவியது.. எனினும் உடனடியாக தீ அணைக்கப்பட்டதால் பெரும் சேதம் தவிர்க்கப்பட்டது..

இந்த தீ விபத்து ஏற்பட்ட போது முதல்வர் விஜய் தமிழ்நாடு இல்லத்தில் இல்லை.. அவர் நிதி ஆயோக் கூட்டத்திற்கு செல்வதற்காக ஏற்பட்ட சற்று நேரத்தில் உணவகத்தில் சிறிய தீ விபத்து ஏற்பட்டுள்ளது..

முதல்வர் விஜய் 12–ம் தேதி வரை டெல்லியில் இருப்பார் எனவும், 12–ம் தேதி காலை மத்திய அமைச்சர்கள் சிலரையும் விஜய் சந்திக்க உள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.. அன்றைய தினம் டெல்லியில் இருந்து அவர் தமிழகம் வர உள்ளதாகவும் கூறப்படுகிறது.

# அண்ணாமலை கட்சியில் ரஜினி மருமகன்?




சென்னை, ஜூன். 11–

ரஜினிகாந்தை வழிகாட்டியாக கொண்டு நடித்து வந்த விஜய், பின்னாளில் அவருக்கே சவால் விடும் அளவிற்கு வளர்ந்தார். இணையத்தில் விஜய் – ரஜினி ரசிகர்கள் மோதல் உச்சம் பெற்ற சம்பவங்களும் நடந்தது. விஜய்யின் அரசியல் வருகைக்கு பிறகு திமுக தலைவர் மு.க.ஸ்டாலினுடனான தனது நட்பை மேலும் வலுப்படுத்தினார்.

இது ரஜினிகாந்த் விஜய்யை எதிர்ப்பதாகவே மறைமுகமாகவே காட்டியது. மேலும், திமுக – அதிமுக கூட்டணி பேச்சுவார்த்தைக்கு தூதாக செயல்பட்டதாகவும் ரஜினிகாந்த் மீது விமர்சனங்கள் எழுந்தது. பின்னர், அவர் அதற்கு மறுப்பு தெரிவித்தார். இந்த நிலையில், ரஜினிகாந்தின் 2வது மருமகனும், சௌந்தர்யா ரஜினிகாந்தின் கணவருமான விசாகன் அண்ணாமலையை கடந்த சில நாட்களுக்கு முன்பு நீண்ட நேரம் ஆலோசனை நடத்தியுள்ளார். அண்ணாமலை பாஜக–வில் இருந்து விலகி தனிக்கட்சி தொடங்க உள்ள நிலையில், இந்த ஆலோசனை நடைபெற்றுள்ளது.

**ரஜினி ரசிகர்கள் ஆதரவு:**

ரஜினிகாந்த் தொடங்குவதாக இருந்த கட்சியில் இணைய அண்ணாமலைக்கு அழைப்பு விடுக்கப்பட்டு இருந்தது. ஆனால், அவர் பாஜக–வில் இணைந்தார். ரஜினிகாந்த் மீது நல்ல மதிப்பும், மரியாதையும் கொண்ட அண்ணாமலை அவரது ரசிகர்கள் ஆதரவை தன்வசப்படுத்தும் வகையில், அவரது மருமகனை உள்ளே இழுக்கவும் காய் நகர்த்தி வருவதாக கூறப்படுகிறது. அதேசமயம், ரஜினிகாந்தும் தான் தவறவிட்ட ஆட்சி அதிகாரத்தை அண்ணாமலைக்குச் செல்ல அஸ்திவாரமாக தனது மருமகனையே அனுப்பி வைக்க முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது.

தவெக ஆட்சிக்கட்டிலில் அமர்ந்தது ரஜினிக்கும், அவரது ரசிகர்களுக்கும் முழு திருப்தி இல்லை என்றே கூறப்படுகிறது. அண்ணாமலையும் ரஜினிகாந்தின் மருமகன் தான் தொடங்கப்படும் கட்சியில் இணைந்தால் அவரது ரசிகர்களின் வாக்குகளை அள்ளலாம் என்ற எண்ணத்தில் உள்ளார்.

**பொதுச்செயலாளர் பதவியா?**


இது தொடர்பான முதற்கட்ட பேச்சுவார்த்தை மட்டுமே தற்போது நடந்து முடிந்துள்ள நிலையில், அண்ணாமலை தற்போது வெறும் இயக்கமாக மட்டுமே தொடங்கியுள்ள நிலையில் கட்சியாக அது மாறும்போது விசாகனுக்கு பொதுச்செயலாளர் அல்லது அதற்கு நிகரான பதவி வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அண்ணாமலை கட்சி தொடங்கினால் அதில் ரஜினியின் மருமகன் முக்கிய பொறுப்புடன் களமிறங்கினால் அந்த கட்சி திமுக–வைக் காட்டிலும் தவெக–வை மிகப்பெரிய அளவில் எதிர்த்து அரசியல் செய்யும் என்றே கருதப்படுகிறது.

ஏனென்றால், கூட்டணி ஆட்சியுடன் ஆட்சியை நடத்தி வரும் விஜய்யின் பக்கமே இருந்தால்தான் அதிகார பங்கைப் பெற முடியும் என்று பல கட்சிகளும் தவெக பக்கமே அணி சேருவார்கள் என்பது உறுதி. இதனால், அடுத்த அரசியல் களமும் தமிழ்நாட்டில் தவெக–வை மையப்படுத்தியே இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# வேலை வாய்ப்பு

## பேங்க் ஆஃப் பரோடாவில் 5000 பணியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: பேங்க் ஆஃப் பரோடா (Bank of Baroda)
அறிவிப்பு எண்: BOB/HRM/APPRENTICE/ADVT/2026/01
பணி வகை: தொழிற்பழகுநர் பயிற்சி (Apprentice Training)
கால அளவு: ஓராண்டு
மொத்த காலிப்பணியிடங்கள்: 5000 தொழிற்பழகுநர் பணியிடங்கள்
பணியிடம்: இந்தியா முழுவதும்
விண்ணப்பிக்கத் தொடங்கும் தேதி: 19.05.2026
விண்ணப்பிக்கக் கடைசித் தேதி: 08.06.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன் (Online)
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://bankofbaroda.bank.in/

# PNG கேஸ் உள்ள பகுதிகளுக்கு புதிய அறிவிப்பு!

## மக்களுக்கு வரவிருக்கும் நோட்டீஸ்!




புதுடெல்லி, ஜூன். 11–


அமெரிக்கா ஈரான் போர் பதற்றத்தின் காரணமாக கேஸ் வரத்து கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்நிலையில் பெட்ரோலிய அமைச்சகம், OMC நிறுவனங்களுக்கு ஒரு மிக முக்கிய அறிவிப்பை வெளியிட்டிருக்கிறது. எந்தெந்த இடங்களில் எல்லாம் பிஎன்ஜி எனப்படும் குழாய் மூலம் ஏறியக்கூடிய எரிவாயு சப்ளை இருக்கிறதோ, அந்த இடங்களில் கட்டாயம் மக்கள் அதை பயன்படுத்தும் வகையில் அறிவிப்புகளை அனுப்புமாறு உத்தரவிட்டிருக்கிறது. பெட்ரோலிய அமைச்சகத்தின் செயலாளர் டாக்டர் நீரஜ் மிட்டல் மாநில அரசுக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். அதில் ஓஎம்சி நிறுவனங்கள் மற்றும் சிட்டி கேஸ் டிஸ்ட்ரிபியூட்டர்கள் இணைந்து இரண்டு அறிவிப்புகளை அனுப்ப வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்.

அவருடைய உத்தரவின் பேரில் 2 பிரிவினருக்கு அறிவிப்புகள் அனுப்பப்பட உள்ளது. இன்னும் சில குடும்பங்கள் பிஎன்ஜி எரிவாயு இணைப்பு இருந்தும், தொடர்ந்து எல்பிஜி சிலிண்டரை பயன்படுத்தி வருகின்றன. இது போன்ற குடும்பங்களுக்கு எல்பிஜி சிலிண்டரை ரத்து செய்யக்கோரி அறிவிப்புகளை அனுப்ப வேண்டும். இரண்டாவதாக தங்கள் பகுதியில் பிஎன்ஜி வசதி இருந்தும் தொடர்ந்து எல்பிஜி பயன்படுத்தும்நுகர்வோருக்கு அறிவிப்பு வழங்க வேண்டும். இந்தியா வெகுவாக எல்பிஜி இறக்குமதியை சார்ந்திருக்கிறது. இதை குறைக்கவும் மக்களை எல்பிஜி–யிலிருந்து பிஎன்ஜி–க்கு மாற்றுவதற்காகவும் இந்த அறிவிப்பு வெளியாகவுள்ளது.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை Ph: 98659 88881


## ஜூன் 11, 2026 – இன்றைய கார்ட்டூன்




# அசுர வேகத்தில் 50 வந்தே பாரத் ரயில்கள்!




புதுடெல்லி, ஜூன். 11–

இந்திய ரயில்வேயின் முதல் 16 பெட்டிகள் கொண்ட வந்தே பாரத் ஸ்லீப்பர் ரயில், மும்பை அகமதாபாத் பாதையில் வெற்றிகரமாக சோதனை ஓட்டத்தை முடித்துள்ளது. இதனைத் தொடர்ந்து, விரைவில் இந்த ரயில் சேவையை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அறிமுகப்படுத்த ரயில்வே அமைச்சகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. சென்னை ஐசிஎப் தொழிற்சாலை கடந்த டிசம்பரில் இந்தியாவின் முதல் வந்தே பாரத் ஸ்லீப்பர் ரயிலை தயாரித்து முடித்தது. மாதிரி ரயிலின் வெற்றிகரமான சோதனைக்குப் பிறகு, 2025 ஏப்ரல் முதல் டிசம்பர் வரை மேலும் 9 ஸ்லீப்பர் ரயில்களை தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. நீண்ட தூர பயணிகளுக்கு வசதியான மற்றும் அதிநவீன சேவையை வழங்கும் வகையில் இவை வடிவமைக்கப்பட்டுள்ளன.

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு மேலும் 50 புதிய வந்தே பாரத் ஸ்லீப்பர் ரயில்களை தயாரிக்க இந்திய ரயில்வே திட்டமிட்டுள்ளது. இதற்கான மின்சார இயக்க அமைப்புகளை வழங்கும் ஒப்பந்தங்கள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன.

இதில் 33 ரயில்களுக்கு மேதா நிறுவனம் மற்றும் 17 ரயில்களுக்கு பிரான்ஸ் நிறுவனமான ஆல்ஸ்டோம் மின்சார இயக்க அமைப்புகளை வழங்கும். 2026–27ம் ஆண்டில் 24 பெட்டிகள் கொண்ட முழுமையான வந்தே பாரத் ஸ்லீப்பர் ரயில்களின் பெருமளவு உற்பத்தி தொடங்கும் என்று ரயில்வே அமைச்சகம் தெரிவித்து ள்ளது.

இந்த முயற்சி, ரயில்வே தொழில்நுட்பத்தில் இந்தியாவின் தன்னிறைவை மேலும் வலு ப்படுத்தும் என கூறப்படு கிறது. இந்த ரயிலில் ஏசி முதல் வகுப்பு, ஏசி 2–டயர், ஏசி 3–டயர் ஆகிய மூன்று பிரிவுகளில் மொத்தம் 1,128 பயணிகள் பயணிக்கலாம். தானியங்கி கதவுகள், மென்மையான படுக்கைகள், ஆன்லைன் வைஃபை வசதி, பாதுகாப்பு தடுப்புகள், தீ தடுப்பு சுவர் போன்ற உலகத் தரத்திலான பாதுகாப்பு மற்றும் சொகுசு அம்சங்களும் இதில் இடம்பெற்றுள்ளன. இறுதியாக, ஆர்டிஎஸ்ஓ அமைப்பு சோதனை முடிவுகளை ஆய்வு செய்து இறுதி சான்றிதழை வழங்கும். பின்னர் ரயில்வே பாதுகாப்பு ஆணையர் அதிகபட்ச வேகத்தில் ரயிலை மதிப்பீடு செய்த பிறகு, இந்தியாவின் முதல் வந்தே பாரத் ஸ்லீப்பர் ரயில் அதிகாரப்பூர்வமாக சேவையில் இணைக்கப்படும்.




# தெருவோர வியாபாரிகளிடம் தினமும் கட்டணம் வசூலிக்க ஐகோர்ட் தடை!



மதுரை, ஜூன். 11–

தெருவோர வியாபாரிகள் தொடர்பாக, தென்காசி மாவட்டம், கடையநல்லூரை சேர்ந்த சித்தார்த்தன் தாக்கல் செய்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கில், உயர் நீதிமன்ற மதுரை கிளை நீதிபதிகள் பி.வேல்முருகன், பி.புகழேந்தி அமர்வு பிறப்பித்த உத்தரவு:

உச்சநீதிமன்ற உத்தரவின்படி, தெருவோர வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கவும், ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்தவும் 2014ல் மத்திய அரசு, 'தெருவோர வியாபாரிகள் சட்டம்' கொண்டு வந்தது.

அதன் அடிப்படையில், தமிழக அரசு 2015ல் சிறப்பு திட்டத்தை வகுத்து அரசாணை வெளியிட்டது. அந்த விதிகளின்படி தெருவோர வியாபாரிகளிடம் ஆண்டுக்கு 250 முதல் 3,000 ரூபாய் வரை மட்டுமே வசூலிக்க வேண்டும்.

ஆனால், கடைய நல்லூர் நகராட்சி, ஒப்பந்த தாரர்கள் வாயிலாக வியாபாரிகளிடம் தினமும் 30 ரூபாய் வசூலித்துள்ளது. இது அரசு நிர்ணயித்த தொகையை விட பல மடங்கு அதிகம்.

இதுபோன்ற முறைகேடு ராமநாதபுரம் நகராட்சியிலும் நடந்தது. இதன் வாயிலாக, ஒப்பந்ததாரர்களும், அதிகாரிகளும் கூட்டுச் சேர்ந்து வியாபாரிகளிடம் சுரண்டுவது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

தமிழகம் முழுதும் தெருவோர வியாபாரிகளிடம் தினமும் கட்டணம் வசூலிப்பதை நகராட்சி, உள்ளாட்சி அமைப்புகள் நிறுத்தி, ஆண்டு உரிம கட்டணம் மட்டுமே பெற வேண்டும். கட்டணம் வசூலிக்க ஒப்பந்ததாரர்களை நியமிக்கும் நடைமுறைக்கு தடை விதிக்கப்படுகிறது.

தெருக்களையோ, நடைபாதைகளையோ ஆக்கிரமித்து கடை வைக்க யாருக்கும் அனுமதியில்லை. விதி மீறுவோர் மீது போலீசார், நகராட்சி கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். பொதுமக்களின் தடையற்ற நடமாட்ட உரிமையும், ஏழைகளின் வாழ்வாதார உரிமையும் நாணயத்தின் இரு பக்கங்கள். அதை சட்டப்ப டியே முறைப்படுத்த வேண்டும். இவ்வாறு உத்தரவிட்டனர்.



மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன் தேனி மாவட்டம் கெங்குவார்பட்டி, காட்ரோடு பகுதியில் உள்ள இயக்குநர் இமயம் திரு.பாரதிராஜா அவர்களின் பண்ணை வீட்டில் உடல்நலக்குறைவால் காலமான இயக்குநர் இமயம் திரு.பாரதிராஜா அவர்களின் உடலுக்கு, தமிழ்நாடு அரசின் சார்பில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

# கரூர் கூட்ட நெரிசல் வழக்கு - மீண்டும் விசாரணையை தொடங்கியது சிபிஐ!



புதுடெல்லி, ஜூன். 11–

கரூர் கூட்ட நெரிசலில் 41 பேர் பலியான பெருந்துயரச் சம்பவத்தில் மீண்டும் விசாரணையை சிபிஐ தொடங்கியது. கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 27–ந்தேதி தவெக பிரசார கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் பலியாகினர். இந்த வழக்கை ஓய்வுபெற்ற சுப்ரீம் கோர்ட் நீதிபதி அஜஸ் ரத்தோகி கண்காணிப்பில் சிபிஐ அதிகாரிகள் விசாரித்து வருகிறார்கள்.

கடந்த ஏப்ரல் மாதம் சட்டசபை தேர்தல் நடைபெற்ற நிலையில் இடைப்பட்ட காலத்தில் சிபிஐ விசாரணை நடைபெறவில்லை. இந்நிலையில் மீண்டும் சிபிஐ விசாரணையை தொடங்கி உள்ளது. கரூர் கூட்ட நெரிசலின்போது பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த காவல் ஆய்வாளர் உட்பட 10 பேருக்கு சிபிஐ சம்மன் அனுப்பி இருந்த நிலையில் ஒரு சில காவலர்கள் மட்டுமே ஆஜராகி உள்ளனர்.

காவல் ஆய்வாளர் சையது அலி மற்றும் ஒரு சில காவலர்கள் மட்டும் தற்போது விசாரணைக்கு ஆஜராகினர்.

# இல்லத்தரசிகள் மாத ஊதிய மதிப்பு ரூ.30,000! சாலை விபத்து வழக்கில் உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தல்!



புதுடெல்லி, ஜூன். 11–

குடும்பத் தலைவிகள்தான் நாட்டை கட்டமைப்பவர்கள்; அவர்களது பணிக்கு மாதம் ரூ.30 ஆயிரம் மதிப்பு என்று உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியிருக்கிறது.

ஒவ்வொரு குடும்பங்களுக்குள்ளும் சமூகத்துக்குள்ளும் வேலைக்குச் செல்லாத குடும்பத் தலைவிகள் மேற்கொள்ளும் பணியானது, இல்லத்தரசிகள் என்ற பொறுப்பில் இருப்பவர்கள் நாட்டைக் கட்டமைப்பவர்கள் என்ற அந்தஸ்தைப் பெற வேண்டும் என்று உச்ச நீதிம ன்றம் வலியுறுத்தியிருக்கிறது.

சாலை விபத்துகளில் உயிரிழக்கும் இல்லத்தரசிகளுக்கான இழப்பீட்டைத் தீர்மானிக்கும்போது, ஊதியம் பெறாமல், அவர்கள் மேற்கொள்ளும் வீட்டு வேலைகளின் மதிப்பை மாதத்திற்கு குறைந்தபட்சம் ரூ.30,000 என கணக்கிட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் வியாழக்கிழமை தீர்ப்பளித்துள்ளது.

மேலும், இல்லத்தரசிகள் "தேசத்தை உருவாக்குபவர்கள்" என அங்கீகரிக்கப்படத் தகுதியானவர்கள் என்றும் அது அறிவித்தது.

நாடு முழுவதும் வாகன விபத்து வழக்குகளில் வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையை மாற்றியமைக்கக் கோரிய ஒரு வழக்கை விசாரித்த, உச்ச நீதிமன்ற நீதிபதிகள் சஞ்சய் கரோல் மற்றும் என். கோடீஸ்வர் சிங் ஆகியோர் அடங்கிய அமர்வு, இல்லத்தரசிகளின் தோராயமான வருவாயை திறன்மிக்க தொழிலாளர்களின் ஊதியத்துடன் ஒப்பிட்டு உருவாக்கும் நீண்டகால நடைமுறையை நிராகரித்துவிட்டது.

இதுபோன்ற அணுகுமுறை, வீட்டுப் பராமரிப்புப் பணிகளின் உண்மையான பொருளாதார மற்றும் சமூக மதிப்பைப் பிரதிபலிக்கத் தவறிவிடுகிறது என்று நீதிபதிகள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

நீதிபதிகள் பிறப்பித்த தீர்ப்பில், "நாங்கள் ஒரு புதிய வழிகாட்டு நெறிமுறையை உருவாக்கியுள்ளோம்; அதன்படி, பிரணாய் சேத்தி வழக்கின் உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் கீழ் கிடைக்கக்கூடிய பிற இழப்பீடுகளுடன் கூடுதலாக, வீட்டுப் பராமரிப்புப்பணிகளை மேற்கொண்ட இல்லத்தரசிகளின் இழப்பிற்கான மதிப்பை மாதத்துக்கு குறைந்தபட்சம் 30,000 என நிர்ணயித்துள்ளோம்" என்று குறிப்பிட்டனர்.

பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த ரேஷ்மா என்ற குடும்பத் தலைவி 2001ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சாலை விபத்தில் மரணம் அடைந்தது தொடர்பான வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம் இந்த தீர்ப்பைப் பிறப்பித்துள்ளது. சாலை விபத்துக்கு இழப்பீடு கோரி, அப்பெண்ணின் கணவரும் மூன்று பிள்ளைகளும் சாலை விபத்து தீர்ப்பாயத்தை அணுகினர். பிறகு இவர்கள் உயர் நீதிமன்றங்களையும் நாடினர். ஆனால், விபத்து நடந்து 20 ஆண்டுகளுக்குப் பின், இந்த வழக்கு நீதிமன்றங்களில் முறைப்படி விசாரணைக்கு வந்தது.

இது குறித்து கவலை தெரிவித்திருக்கும் உச்ச நீதிமன்றம், சாலை விபத்து வழக்குகளில் ஓராண்டுக்குள் இழப்பீடு குறித்து முடிவெடுத்து அறிவிக்க வேண்டும். அனைத்து நீதிமன்றங்களும் இதில் கண்காணிப்புடன் இருக்க வேண்டும். குடும்பத் தலைவர்களின் பணி மதிப்பு பொருளாதார ரீதியாக மதிப்பிடப்படாமல், அவர்கள் வேலை செய்யாத பணியாளர்களைப் போலவே கருதுகிறது. இதுபோன்று சில வழக்குகளையும் விசாரித்த உச்ச நீதிமன்றம், இல்லத்தரசிகளுக்கு முறைப்படி ஊதியம் கொடுப்பதில்லை என்பதற்காக அவர்களது பணியை குறைத்து மதிப்பிடக்கூடாது, அவர்கள் குடும்பத்தில் செய்யும் வேலைக்கு மதிப்பிட முடியாத அளவுக்கு மதிப்பு உள்ளது என்றும் குறிப்பிட்டிருந்தது.

# தங்கம் வாங்க சரியான நேரம்!



சென்னை, ஜூன். 11–

சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.2,400 குறைந்து ரூ.1,08,000–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.300 குறைந்து ரூ.13,500–க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஒரு சவரன் தங்கம் கடந்த 2 நாட்களில் மட்டும் ரூ.5,600 குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

வெள்ளி விலையில் இன்று மாற்றம் இல்லை. ஒரு கிராம் வெள்ளி ரூ.260–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

# திருமணத்தில் தங்கத்திற்கு பதில் நிலம்: தமிழகத்தில் புதிய கலாசாரம் பரவுகிறது!

"என்னப்பா! பத்திரிகை எல்லாம் வைத்தாச்சு... இந்த விலைவாசி விக்கிற விக்கில பொண்ணுக்கு எவ்வளவு நகை போடப்போற? அத சொல்லவே இல்லையே?"

தனது நெருங்கிய நண்பரின் மகள் திருமண அழைப்பிதழை நீட்டியபோது, மற்றொரு நண்பர் எதார்த்தமாகக் கேட்ட கேள்வி இது. அதற்கு அந்தத் தந்தை சிரித்துக்கொண்டே, "ஒரு பவுன் நகைகூட இல்லை. அதற்கு பதிலாக எங்கள் பூர்வீக ஊரில் இருக்கும் 2 சென்ட் இடத்தை மகள் பெயரில் எழுதி கொடுக்கப் போகிறேன்" என்றார். இதைக் கேட்ட நண்பர் ஆச்சரியமடைந்தாலும், உடனே ஆமோதித்தார்.

"அதுதான் சரி. எனக்குத் தெரிந்தே சமீபத்தில் மூன்று திருமணங்களில் நகைக்குப் பதிலாக நிலத்தை எழுதிக் கொடுத்திருக்கிறார்கள்" என்றார்.

இந்த உரையாடல் ஏதோ ஒரு குடும்பத்தின் தனிப்பட்ட கதை அல்ல. தங்கம் விலை எட்டாக்கனியாக உயர்ந்து வரும் சூழலில், தமிழகத்தின் பல நடுத்தரக் குடும்பங்களில் இன்று ஒலிக்கத் தொடங்கியிருக்கும் புதிய எதார்த்தம் இது. பெண் பிள்ளைகளின் திருமணத்திற்காகத் தங்க நகைகளைச் சேர்த்து வைப்பதற்குப் பதிலாக, தங்களிடம் இருக்கும் நிலம், வீடு, காலி மனை போன்ற சொத்துகளை மகள்களின் பெயரில் எழுதிக் கொடுக்கும் புதிய கலாச்சாரம் தமிழகத்தில் வேகமாக பரவி வருகிறது.

உலகத் தங்கக் கவுன்சிலின் புள்ளிவிவரங்களின்படி, உலகிலேயே அதிக தங்கத்தை வாங்கும் நாடுகளில் இந்தியா முன்னணியில் உள்ளது. இந்தியாவின் மொத்த தங்க நுகர்வில் சுமார் 40 சதவீதம் தென்னிந்திய மாநிலங்களிலேயே நடைபெறுகிறது. அதிலும், அதிக தங்கம் வாங்கப்படும் மாநிலமாக தமிழகம் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. தமிழகத்தில் மட்டும் ஆண்டுதோறும் சராசரியாக





150 முதல் 200 டன் வரை தங்கம் விற்பனையாகிறது. இதில் 70 முதல் 80 சதவீதம் தங்கம் திருமணங்களுக்காகவே வாங்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

தமிழகத்தில் பெண் பிள்ளைகளை பெற்றவர்கள், மகளின் திருமணத்திற்காக அவள் சிறு வயது முதலே சிறுகச் சிறுகப் பணம் சேமித்து வைப்பது வழக்கம். தபால் நிலையம், வங்கி, காப்பீட்டுத் திட்டங்கள் உள்ளிட்ட பல வழிகளில் இந்தச் சேமிப்பு நடைபெறுகிறது. ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு தந்தை தனது மகளின் திருமணத்திற்காக ரூ.5 லட்சம் சேமித்து வைத்திருந்தால், ஒரு பவுன் தங்கம் ரூ.50 ஆயிரம் என்ற விலையில் 10 பவுன் நகையை வாங்க முடிந்தது. ஆனால் இன்று தங்கத்தின் விலை வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்துள்ளதால், அதே ரூ.5 லட்சத்தில் 4 பவுன் நகையைக்கூட முழுமையாக வாங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழகத் திருமணங்களில் மணமகளின் வசதிக்கேற்ப குறைந்தபட்சம் சில பவுன்களாவது நகை அணிவித்து அனுப்புவது நீண்டகால பாரம்பரியமாக இருந்து வருகிறது. ஆனால் கடந்த சில மாதங்களில் தங்க விலை கண்டிராத உயர்வை எட்டியதால், சாமானிய மற்றும் நடுத்தரக் குடும்பங்களுக்கு நகை வாங்குவதே பெரும் சுமையாக மாறியுள்ளது.

இதனால், திருமண மேடையில் தங்கம் ஜொலிப்பதை விட, மகளின் பெயரில் இருக்கும் நிலப் பத்திரமோ, வீட்டுச் சொத்தோ அவளது எதிர்காலத்திற்கு அதிக பாதுகாப்பையும் பொருளாதார சுதந்திரத்தையும் வழங்கும் என்ற எண்ணம் பெற்றோர்களிடையே வலுப்பெற்று வருகிறது. நகை என்பது காலப்போக்கில் கரையக்கூடிய சொத்து. ஆனால் நிலம் என்பது தலைமுறைகளைத் தாண்டி மதிப்பு உயரக்கூடிய சொத்து. இந்தப் புரிதலே பல குடும்பங்களை புதிய முடிவுகளுக்கு வழிநடத்துகிறது.

ஆனால் இங்கேதான் மிக முக்கியமான கேள்வி எழுகிறது.

நிலம், வீடு, காலி மனை போன்ற சொத்துகள் கைவசம் உள்ள பெற்றோர்கள் இவ்வாறு மாற்று வழியைத் தேர்ந்தெடுக்கலாம். ஆனால் சொத்தே இல்லாத, மாத வருமானத்தை நம்பி வாழும் ஆயிரக்கணக்கான நடுத்தர மற்றும் ஏழைக் குடும்பங்கள் என்ன செய்வார்கள்? தங்கத்தின் விலை தொடர்ந்து உயர்ந்து கொண்டே சென்றால், அவர்களின் மகள்களின் திருமணக் கனவுகளுக்கு யார் பதில் சொல்வார்கள்?






Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020